2019 ஜூலை 1]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக* budget demand*–லே மீனவர்களுக்காக ஒதுக்கப்படுகின்ற நிதியில் பாதி அளவு கன்னியாகுமரி மாவட்டத்திற்குத்தான் போகிறது. அதனால் உறுப்பினர் கவலைப்படத் தேவையில்லை. ஏற்கெனவே நிறைய கொடுத்திருக்கிறோம். இப்போது கிட்டத்தட்ட 598 வீடுகள் உங்கள் மாவட்டத்திற்குக் கொடுக்க வேண்டுமென்பது* target. *இதில் 405 வீடுகளை இப்போது எடுத்திருக்கிறோம். நீங்கள் சொன்னதுமாதிரி அந்தக் கிராமங்களில் பழுதடைந்த வீடுகளை* renovate *செய்ய முடியவில்லையென்றால், அவற்றை இடித்துவிட்டு புதிய வீடுகளைக் கட்டித் தருவதற்கு வேண்டிய நடவடிக்கை பட்டா இருக்கும்பட்சத்தில், இல்லையென்றால்* NOC *இருக்கும்பட்சத்தில், மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

5—

சட்டக் கல்லூரி

***46876—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசியில் சட்டக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலே புதிய சட்டக் கல்லூரி அமைக்கின்ற கருத்துரு ஏதும் இல்லை.

[2019 ஜூலை 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

முற்பகல் 10—40

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், புரட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், அவருக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி சட்டமன்றத் தொகுதி, தென்காசி நகரத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், முதன்மை சார்பு நீதிமன்றம், கூடுதல் சார்பு நீதிமன்றம், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் நீதித் துறை நடுவர் மன்றம் என ஆறு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்துமே வாடகைக் கட்டடங்களில்தான் செயல்பட்டுக் கொண்டிருந்தன. நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் முதல் கோரிக்கையாக எங்களுக்கு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டதன் விளைவாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 15 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து, இன்று அந்தக் கட்டடப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இன்னும் 3 மாத காலத்திற்குள் அது கட்டாயம் திறக்கப்படும். ஆகவே, நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், இதனை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். இதன் அருகிலேகூட வேளாண்மைத் துறையைச் சேர்ந்த 30 ஏக்கர் நிலம் எந்தவிதப் பயன்பாடும் இல்லாமல் இருக்கின்றது. ஆகவே, இதனை மீண்டும் பரிசீலனை செய்து, சட்டக் கல்லூரி துவங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 1]

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 2016 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அரசு சட்டக் கல்லூரிகள் 7 இருந்தன. தற்போது மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், தமிழகத்திற்கு ஒரே நேரத்திலே 3 சட்டக் கல்லூரிகளை பின்தங்கிய மாவட்டங்களுக்குக் கொடுத்து, கிட்டத்தட்ட 210 கோடி ரூபாய் அளவில், 3 சட்டக் கல்லூரிகளுக்கான கட்டடப் பணிகள் நிறைவடைகின்ற நிலையில் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், சென்னையிலே இயங்கி வந்த சட்டக் கல்லூரி, பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக, உயர் நீதிமன்றத்தின் உத்தரவின்படி காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பாக்கம்; திருவள்ளூர் மாவட்டம், பட்டரைபெரும்புதூர் என இரண்டு சட்டக் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்பட்டு, அவை செயல்பட்டு வருகின்றன. தமிழகத்திலே தற்போது 11 சட்டக் கல்லூரிகளும், சென்னையிலே சீர்மிகு சட்டப் பள்ளி, திருச்சியிலே தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் ஆகியவை இயங்கிக் கொண்டு வருகின்றன; 3,774 மாணவர் சேர்க்கை இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, தேவையான இடங்களிலே இன்றைக்கு சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற தென்காசிக்கு அருகிலே திருநெல்வேலியிலே தற்போது சட்டக் கல்லூரி இயங்கி வருகிறது. எதிர்காலத்திலே தேவை இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.*

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேகூட, தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் தேவை என்ற கோரிக்கையை வைக்கும்போது, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று, விரைவில் அதற்கான பணிகள் துவங்கப்படும் என்று கூறியுள்ள காரணத்தினால், தென்காசி தனி மாவட்டமாக உருவாகப் போவது உறுதி. ஆகவே, நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

இன்னும் ஓரிரு மாதங்களில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கரங்களால் ஒருங்கிணைந்த நீதிமன்றம் திறக்கப்பட இருக்கின்றது. அங்கு கிட்டத்தட்ட 500–க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பணியாற்றி வருகின்றார்கள். அவர்களுக்கு தனியாக ஒரு Law Chamber–ஐச் சேர்த்து ஒதுக்கீடு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுக்கென தனியாக அறைகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று அனைத்து மாவட்டங்களிலிருந்தும் கோரிக்கை வந்து கொண்டிருக்கின்றது. தற்போது உயர் நீதிமன்றம் மற்றும் சேலம் உள்ளிட்ட ஒரு சில மாவட்டங்களில் மட்டும் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரை பெறப்பட்டால், எதிர்காலத்திலே நிதிநிலைமையைப் பொறுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

6—

கலைக் கல்லூரி

***13552—திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதி, கம்பம் அல்லது சின்னமனூரில் கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கக்கூடிய தருமபுரி மாவட்டத்தில், பாப்பிரெட்டிப்பட்டி,